மக்களைப் பற்றி கவலைப்படுகிற அரசு இந்த அரசு என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு, இந்த ஆண்டே உடனடியாக அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

அனல் மின் நிலையம்

*1534—திருமதி பெ. சீத்தாபதி:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, மரக்காணம் வட்டத்தில் புதிய அனல் மின் நிலையம் அமைத்து மின் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மரக்காணம் பகுதியில் புதிய அனல் மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே 13,000 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் புதிய அனல் மின் திட்டங்கள் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதனால் மரக்காணம் பகுதியில் புதிய அனல் மின் நிலையம் அமைக்கின்ற கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

முற்பகல் 10-20

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைர விழா நாயகர், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் எங்கள் கழகத்தின் செயல் தலைவருமான அண்ணன் தளபதியார் அவர்களையும் வணங்கி, என்னுடைய வினாவினைத் தொடுக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி, மரக்காணம் வட்டம், நடுக்குப்பம் ஊராட்சியை மையமாக வைத்து கந்தாடு, குரும்பரம், புதுப்பாக்கம், வடகோட்டிப்பாக்கம், ஆலத்தூர், அடசல், வண்டிப்பாளையம், புதுக்குப்பம், ஓமிப்பேர், முருக்கேரி, கொளத்தூர், தேவிகுளம், டி.என். பாளையம் ஆகிய பகுதிகள் உள்ளன. அந்த இடத்தில் அணு மின் நிலையம் அமைத்து மின் உற்பத்தி செய்தால், தமிழ்நாடு முழுமைக்கும் மின்சாரம் பயன்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டது அனல் மின் நிலையம் வேண்டும் என்று. இப்போது அணு மின் நிலையம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஓர் அணு மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், மாநில அரசால் அமைக்க முடியாது. மத்திய அரசால் மட்டும்தான் அமைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற மரக்காணம் பகுதியின் பக்கத்தில் இருக்கும் செய்யூரில் 4,000 மெகாவாட் திறன்கொண்ட மத்திய அரசின் அனல் மின் நிலையம் அமையவிருக்கிறது. அந்த அனல் மின் நிலையத்திலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தில்,

தமிழக அரசுக்கு 1,600 மெகாவாட் மின்சாரம் கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இதுபோன்ற திட்டங்களெல்லாம் அப்பகுதிக்கு வரவிருக்கின்றது. எனவே, ஒவ்வொரு தொகுதிக்கும் அனல் மின் நிலையம் அமைக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனல் மின் நிலையம்தான் நான் கேட்கிறேன். அணு மின் நிலையம் அல்ல. சர்வே எண்கள் 593, 655, 680, 681, 682 அமைந்துள்ள பகுதிகளில் சுமார் 3,500 ஏக்கர் பரப்பளவுள்ள அரசுப் புறம்போக்கு மற்றும் கழிவெளி நிலங்கள் உள்ளன. 2008-2009 ஆம் ஆண்டு மத்திய அரசால் அனல் மின் நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, அது கிடப்பில் போடப்பட்டுள்ளது. அங்கு அனல் மின் நிலையம் அமைந்தால் தமிழ்நாடு முழுமைக்கும் மின்சாரம் கிடைக்கும். அதுமட்டுமல்லாமல், அப்பகுதிவாழ் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பின்மூலம் கிட்டத்தட்ட 1,500 பேருக்கும், மறைமுக வேலைவாய்ப்பின்மூலம் 1,000 பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். மேலும், அனல் மின் நிலையம் அமைப்பதன்மூலம், நிலக்கரி கொண்டு வருவதற்கு சிறிய துறைமுகம் அமையவும் வாய்ப்பு இருக்கிறது. இதனால் பின்தங்கிய மாவட்டமான விழுப்புரம் மாவட்டத்திற்குப் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதோடு, வேலைவாய்ப்பும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், அது முன்னேறிய மாவட்டமாகத் திகழும். எனவே, அந்தப் பகுதிக்கு அனல் மின் நிலையம் அத்தியாவசியமான ஒன்று என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதோடு, அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தேவைக்கேற்பதான் புதிய அனல் மின் நிலையத்தை அமைக்க முடியும். அடுத்த ஐந்து ஆண்டு

2017 ஜூன் 23]

காலத்திற்குள், 13,000 மெகாவாட் அளவிற்கு மின் உற்பத்தியைப் பெருக்குகிற வகையில் புதிய அனல் மின் நிலையங்களை அமைக்க இருக்கின்றோம் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதுபோக, மத்திய அரசினுடைய 4,000 மெகாவாட் அனல் மின் நிலையத்திலிருந்து, 1,600 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்க இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியில் அரசுப் புறம்போக்கு நிலம் இருப்பதால் அந்தப் பகுதியில் அனல் மின் நிலையம் அமைக்க வேண்டும்; அதன்மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். தொழில் துறை மானியக் கோரிக்கை இன்று நடைபெறவிருக்கிறது. தொழில் துறை மானியக் கோரிக்கையின்போது, சிப்காட் நிறுவனத்தின்மூலம் நிலத்தை எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு புதிய தொழிற்சாலை கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் நகராட்சி, அஸ்தினாபுரம் பகுதியில், கடந்த ஆண்டு இதே துணை வினாவைக் கேட்கின்றபோது, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாகப் பரிசீலித்து, இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்கள். ஆனால், ஓராண்டு காலம் ஆகிவிட்டது. இதுவரை துணை மின் நிலையம் அமைக்க ஆய்வுப் பணிகள் நடைபெற்றனவா என்றுகூடத் தெரியவில்லை. மேலும், பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி 6½ இலட்சம் மக்கள்தொகை கொண்ட மிகப் பெரிய தொகுதி. அனகாபுத்தூர் நகராட்சி, பொழிச்சலூர் ஊராட்சிப் பகுதிகளில் கிட்டத்தட்ட 80,000 மக்கள் வசிக்கிறார்கள். அங்கே ஒரு துணை மின் நிலையம்கூட அமைக்கப்படவில்லை. எனவே, அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றையதினம்கூட மரியாதைக்குரிய அண்ணன் திரு. அன்பரசன் அவர்கள் கேட்டபோது சொன்னேன். அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் சொல்லிக்கொள்வது, கார்ப்பரேஷன் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க இடம் இல்லை. அதாவது, மாநகராட்சிப் பகுதிகளில் இடம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. மக்களுக்குச் செய்வதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தை ஆய்வு செய்து, துணை மின் நிலையம் அமைக்க இடம் இருக்கிறது என்று சொன்னால், அதை நிறைவேற்றித் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

74—

மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

*8565—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, ஓட்டேரி 70-வது வார்டு, குக்ஸ் சாலையில் உள்ள தாய்-சேய் நல மையத்தினை 10 படுக்கை வசதி கொண்ட தாய்-சேய் நல மருத்துவமனையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?